
வெளியீடு எண் ௧௬௪.


# துள்ளி வருகுது வேல்



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி

643

வேளூர் தேவஸ்தானம்.



ஆதிவைத்தியநாதரும், கோபுரமும்.

வெளியீட்டெண் கசசு

உ
குருபாதம்

643

# துள்ளி வருகுது வேல்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உரு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகளின்

திருவுளப்பாங்கின்வண்ணம்

அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்,

வித்துவான்,

திரு. G. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L., அவர்களால்

எழுதப்பெற்று

புள்ளிருக்குவேளூர்

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது.

1947

அணு 2

## பதிப்புரை

ஞானசத்திதரன் என்பது முருகன் திருப்பெயர்களுள்* ஒன்று. ஞானசத்தியே வேலாயுதம். இதுவே முருகன் படைகள் பலவற்றுள்ளும் சிறந்தது. கதிர் வேலா, வேலப்பா என்றெல்லாங்கூட அவன் அழைக்கப்படுவான். இத்தகைய வேல் ஒரு காலத்தில் துள்ளி வந்து விளையாடியது. விளையாடிய வரலாற்றைப் பலரும் அறிந்து போற்றி உய்யவேண்டும் என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருவுள்ளங்கொண்டார்கள். அக்குறிப்பின் வண்ணம் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் வித்துவான் திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B. L., அவர்கள் 'துள்ளி வருகுது வேல்' என்ற தலைப்பினைக்கொண்ட இந்நூலை எழுதித்தந்தார்கள். இவ் வுரைநடை மிகத் தெளிவான எளியநடையில் துள்ளலோசை படச்செல்வது கருதத்தக்கது. படிக்கும்போதே ஞான சத்திவேல் மனத்தில் துள்ளி ஓடி வருவதைக் காணலாம்.

இத்தகைய இந்நூல், ஆதீனத்துக்குச் சொந்தமான புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் கோயில்கொண்டு அன்பர்கட்கு அருள் வழங்கும் செல்லக் குழந்தை ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு சர்வசித்து ஆண்டு கார்த்திகைத் திங்கள் மூன்றும் நாள் நடக்கும் கந்தசஷ்டித் திருநாள் சூரசம்ஹாரத்தன்று வெளி வருகிறது. அன்பர்கள் பெற்றுப் படித்து உய்வார்களாக.

திருச்சிற்றம்பலம்.

# துள்ளி வருகுது வேல்

" வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளி வருகுது வேல்"

ஒவ்வொரு நாட்டிலும் ஆங்குள்ள மக்கள் தத்தமது இனம், நிலம், மனம், குணம், அறிவு, விருப்பம், சிறப்பு, கலை, பண்பாடு இவைகளுக்கு ஏற்றவாறு சமயக்கருத்துக்களையும், தெய்வக்கோட்பாடுகளையும் வகுத்துக்கொண்டுள்ளார்கள். உலகிடைத் தோன்றியுள்ள பல்வேறு சமயங்களையும், அவை தோன்றிய காலத்தையும், அவற்றை நிறுவியோர் வரலாற்றையும் நாம் எளிதிற் கணித்தறிதல் கூடும். பசையற்ற அரேபிய நாட்டுப் பாலைவனத்திடையே பசுஞ்சோலை தழைத்தது போல் இஸ்லாம் தோன்றி சுமார் 1400 ஆண்டுகளே ஆகின்றன. யூதர்களிடையே கிறித்துவ சமயம் தோன்றியது 1950 ஆண்டுகட்கும் உட்பட்டதேயாகும். சீனத்தில் புத்தமதம் பரவியதும் 2400

ஆண்டுகளுக்கு மேற்போகாது. இந்திய நாட்டில் ஆரியர் புகுந்த பின்னரே வேதக் கொள்கையாகிய வைதீக நெறி பரவியது. அவ்வேதங்களினுள்ளும் தத்துவக்கொள்கைகள் பலவும், ஆரியர் புகுமுன் இந்தியநாட்டில் தொல்குடி மக்களாய் வாழ்ந்த திராவிடர் எனப்படும் தமிழ் மக்களிடமிருந்தே கைமாறப்பட்டவைகள். இன்று இந்திய நாட்டில் பலவகைச் சமயக்கொள்கைகள் பயின்றுவரப்படுகின்றன. வேங்கடத்திற்குத் தெற்கே தேங்கிடமாய்ச் சிறுகிக் கொண்ட இன்றைய தமிழ் நாட்டிலும் பல சமயங்கள் பரவியுள்ளன. புது நெறிக் கொள்கைகளும் புகுந்துகொண்டே இருக்கின்றன. அரவிந்தரின் அடியார்கள், ரமணரின் ரசிகர்கள், சாயிபாபா சார்புடையோர் போன்ற திருக்கூட்டத்தாரும் உண்டு. இவையாவும் பளிங்கு நீரினைப் பாசி மறைத்ததுபோல் மேலோட்டமாகவே கவிந்து கிடக்கின்றன. இவற்றை ஒதுக்கிக் கொண்டு உற்றுப்பார்த்தால் பண்டைத்தமிழரின் பழைய சமயம் இன்றும் அழியாது விரிந்து கிடப்பதை விளங்கக் காணலாம்.

பொய்தீர் ஒழுக்கநெறியே மைதீர் தமிழரின் மாண்புடைத் தவநெறி; திரு நின்ற செம்மைக் குரு நின்ற சிவ நெறி; அதுவே தமிழர் தோன்றிய நாள் முதல், தொன்றுதொட்டு இன்றுவரை இலங்கிவரும் இயல்நெறி. அது தோன்றிய காலத்தை ஆராய்ந்து அளவிடுதல் யாராலும் இயலாது. தமிழர் நெறியின் அடிப்படைக் கட்டிடம் காலம்

என்னும் மணலால் மறைபட்டுக் கிடக்கிறது. நமக்குக் கூடுமான வரையில் இலக்கியத் துறைவழி நுழைந்து சென்று எட்டிப்பார்த்தால், சங்ககாலத் துக்கு அப்பால் நம்மால் செல்லக்கூடவில்லை. அக்காலத்திலும் தமிழர் நாகரிகத்தின் உச்சநிலை எய்தியே விளங்கினர். மன அறிவு சிறக்கப்பெற் றிருந்தனர். கல்வி கேள்விச் செல்வமுற்றிருந் தனர். ஆராய்ச்சியில் முன்னேறினர். உலகிடை வாழ்வாங்கு வாழ்ந்தனர். ஊக்கமும் ஆக்கமும் உயர் வரப்பெற்றிருந்தனர். அவர்களின் சமய வாழ்க்கை சாலச்சிறந்தது. உடல், உயிர், கடவுள், வினை, ஊழ், வீடு இவற்றைப் பற்றி ஆர்ந்த சிந்தனையும் தீர்ந்த முடிவுகளும் கொண்டிருந்தனர். கோள்களின் நிலை களையும், பூதங்களின் இயல்புகளையும் நன்கு கணித் திருந்தனர். பிறவா யாக்கைப் பெரியோனாகிய நீலமணிமிடற்றுச் செம்பொருளை முழு முதற் கடவுளாகக்கொண்டு, அவன்வழித் தோன்றிய மூவா இள நல முருகனை வாழ்க்கையின் கதியாக வழிபட்டு வாழ்ந்தனர்.

யாண்டுண்டு கொல்லோ இளமை! என இரங் கும் முதுமையைவிட இளமையே சிறந்தது என் பதைத் தமிழர் கண்டனர். இளமையின் ஆற்ற லும் எழிலும் முதுமைக்கு இல்லை என்பதை அறிந்தனர். "இளமையிற் சிறந்த வளமையும் இல்லை" என்பது நற்றிணை-126 வது பாடல். இளமை நில்லாது கழிவதைக்கண்டு அது அழியாது

நிற்கும் நெறிதேடினர். இவ்வாறு மிகச் சிறந்த இளமையைக் கடவுளாகவே கண்டுவிட்டனர். என்றும் அழியா இளமைக் கடவுளுக்கு அழகு என்னும் உருவை அமைத்தனர். இளமையும் அழகும் இவ்வுலகிடை இருந்தாலும், வீரமற்ற வாழ்வு தாழ்வையே கொடுக்கும் என்பது வீரத் தமிழருக்குத் தீரத்தெளிந்த செய்தி. வீர மின்றி விழுமிய கடவுளும் இவ்வுலகிடைவாழ்தல் இயலாது. பண்டைத்தமிழர் உடற்கட்டாலும், ஒழுக்கநெறியாலும் இளமையும் அழகும் வளம்பெறக்கொண்டிருந்தனர். தங்கள் அறிவின் ஒளியால் வீரப் புலி போல் வீறுபெறவாழ்ந்தனர். வீரத்தைப் போற்றினர். வீரரைப்புகழ்ந்து பரவினர். ஆதலால் அழகு உருக்கொண்ட இளமைக் கடவுள் கையில் வீரத்தை வேலாக வடித்து நிறுத்தினர். உடனே முருகன் குதித்துவிட்டான்.

அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலகம் உய்ய.

இதனால் தமிழர் தங்கள் வாழ்க்கையில் சிறப்புயர்வாகக் கொண்ட இளமையையும், அழகையும், வீரத்தையும் என்றும் இளைய அழகிய வேலோனாய்

விளங்கச்செய்து பரவித் தொழுதது வியப்பாகாது. முருகன் வழிபாடு தமிழரிடையே நெடும் பண்டைக் காலமுதல் நிகழ்ந்து வருகிறது. சங்க இலக்கியங் களில் செவ்வேள் என்றும், மேவலன் முருகன் என்றும் பல இடங்களிலும் வருவதைப் பரக்கக் காணலாம். சிலப்பதிகாரத்தில் பல கோட்டங்களி னிடையே வேற்கோட்டமும் காணப்படுகிறது. வேற்கோட்டம் என்பது முருகன் கோயில். அங்கு முருகனது வேலை வைத்து வழிபட்டு வந்தனர். முருகனைப் பரவினது போலவே அவனது வேலை யும் பரவினர்; பாடினர்; புகழ்ந்தனர். அணங்குடை முருகன் கோட்டத்தைக் கலந்தொடாமகளிர் நெருங்கிச் செல்லவும் அஞ்சி ஒதுங்குவர் என்று புறநானூறு-299 வது பாடல் புகல்கிறது. திருச் செந்தில், திருவேரகம், திருப்பரங்குன்றம் போன்ற முருகன் திருப்பதிகள் இன்று நேற்று வந்தன என்றில்லாமல் தொன்று தொட்டே தொல்பதி களாய் முருகனுக்கு உகந்தனவாய் விளங்கிவந்தன.

வெண்டலைப் புணரி அலைக்குஞ் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே.

(புறநானூறு- 55)

இன்றும் திருச்செந்தூர் செல்பவர்கள் நெடுவேள் கோயிலின் முன்னுள்ள மணல்மேட்டினை ஒரு நாளும் மறக்கமுடியாது. வேள் என்னும் பெயர்

காமனையும் குறிக்குமாதலால், அவனினின்றும் முருகனைப் பிரிப்பதற்கு நெடுவேள் செவ்வேள் என்று அடைகொடுத்து வழங்கப்படும். சிலப்பதி காரத்தில் மகளிர் முருகன் வேலினைப் பாடிப் புகழ் வதை நாடிக்கண்டு நாமும் மகிழ்ந்திடலாம்:-

உரையினி மாதராய் உண்கண் சிவப்பப்
புரைதீர் புனல் குடைந் தாடினோ மாயின்
உரவுநீர் மாகொன்ற வேலேந்தி யேத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி.

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாட்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே.

அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
*பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே.

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான் திருக்கைவே லன்றே
‡வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே.

வேல்! வேல்! என்று வேற்கண் மடநல்லாரும் எல்லாரும் ஏத்தினர். பழந்தமிழ் நாட்டிலே

---

*மயில்; யானையுமாம். ‡மலையைச்சூழவரும் சூரன்

போராடும் வேலினை நீராட்டி வழுத்தினர். நீராட்டிச் சீராட்டிப் பாராட்டும் எடுத்தனர் பழந்தமிழ் வீரர்கள். வீரத்தமிழர் போருக்குப் புறப்படுமுன் வேலுக்குப் பீலி கட்டி, மாலைசூட்டி, மகளிர் சூழ்ந்து மங்கல வாழ்த்தொலி எடுப்ப, இன்னிசையாழும் கருவியும் பாட, ஊர்வலம் வந்து, நீராட்டி வேல் விழாக் கொண்டாடுவர் என்பதைக் கீழ்வரும் அடிகளிற் காணலாம்.

மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினுஞ் செல்லும்.

(புறநானூறு — 332)

வேல்என்றவுடனே வீரம் முன்வந்து நிற்கிறது. முருகன் திருக்கைவேல் தீரவேல் அவுணரால் சிறை வைத்த தேவர்களை மீட்டுக் கொடுத்தது. கடலைப் பருகி வற்றச்செய்த கொற்றமுடையது. சூரன் மார்பையும் சூர்மலையையும் சுட்டுத் துளைத்தது, தொலைத்தது. அதுவே நமக்குத் துணை என்கிறார் நக்கீரர்:—

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

நக்கீரர் தாம் அனுபவித்து ஐயமின்றிக் கண்ட உண்மையை இவ்வாறு எடுத்து மொழிகிறார். அவர் அனுபவம் யாது ?

999 மனிதரைக் குகையில் அடைத்து வைத்திருந்த ஒரு பூதம், மற்றும் ஒருவரைச் சேர்த்து ஆயிரம் பேராக உண்ணவேண்டும் என்று காத்திருந்தது. ஒரு குளத்தின் கரையருகே நக்கீரர் உட்கார்ந்து சிவபூசை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது மரத்திலிருந்து ஓர் இலைப்பழுப்பு நீரிற் பாதியும் கரையிற் பாதியுமாக விழுந்தது. உடனே அது மீனும் பறவையுமாக மாறி ஒன்றோடொன்று இழுத்துக்கொண்டு நின்றன. நக்கீரரின் கருத்து அப்புதுமைக் காட்சியிற் புகுதலுற்றது. அதனால் அவர் சிவபூஜைக்குப் பழுதுவந்தது. அதைக்கண்ட பூதம் நக்கீரரைப் பிடித்துக் குகைகொண்டு அடைத்தது. அவரைக்கண்ட ஏனை 999 பேர்களும் தங்கள் முடிவுக்கு அவர்காரணரானார் என்று நொந்து கொண்டனர். அதனை அறிந்த நக்கீரர் முருகனை நினைத்துத் திருமுருகாற்றுப்படை பாடினார். அன்று கிளையோ டெழுந்த சூரனும் கிரியும் துளைபட்டுருவத் தொடும் வேலால் அளைபட்டழியச் செய்யாயோ எனச் செய்யோனை வேண்டிப் பின்னும் பாடினார்:-

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா — முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

இவ்வாறு நெக்குருகி வேல்! வேல்! என்று வரவழைத்தார். வாவென்றழைத்தால் வாராதிருப்பனோ கலியுகவரதன்? துள்ளித் திரித்து வெள்ளி விரித்து வீரன்வேல் ஓடிவந்தது. குகைபிளந்து பூதமும் பொடியாய்ச் சிதறுண்டது. ஆயிரம் பேரும் விடுதலை அடைந்தனர். குகையைத் தகர்த்துப் பகையினைக் களைந்த குகனது வேலுக்கு நாவார நன்றிசெலுத்தினர் புலவர்:—

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்*பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

நக்கீரர் வரலாறு நமக்கு ஓர் உறுதி அளிக்கிறது. நெஞ்சில் முருகா என்று ஒருகால் நினைக்கின் வெஞ்சமரிடையும் அஞ்சல் என வேல் தோன்றும்; அஞ்சு முகமும் ஆறுமுகமாகும்.

வேல் என்று ஒருகால் நினைந்தால் முருகனது இருகாலும் முன்வந்து நிற்கும் என்பது உண்மை. ஆயின், முருகா என்று ஒரு கால் மட்டும் ஏன் நினைப்பது? பல காலும் பன்னுவேன். எக்காலும் ஏத்தெடுப்பேன். ஒரு காலும் மறந்தறியேன். வேல் மயில், சேவல் என்று பாடிக் கொண்டிருப்பதே எனக்குவேலை. அதுவே நான் வேண்டுவது. முருகா! அதுவே நீ எனக்கு இடும் கட்டளை! நான் செய்யும் தொண்டு. கணபதிக்குப் பின்பிறந்த வரபதியே!

---

*குகை.

வடிவேலா! இதுவே எனக்கு நீ அருளும் வரம் என்று பரிந்துபாடுகிறார் அருணகிரிநாதர்:—

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

அருணகிரியார் முருகனிடத்திற் கொண்ட பக்தி ஒப்புவமை இல்லாதது. கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி பாடிச் சந்தத்திருப்புகழைச் சந்ததமும் தொடுத்தணிந்து உருகினவர். அவர் முருகனைப் பாடியது போல் வேறு எவரும் பாடி அறியார். வேல்! வேல்! வேல்! என்று விடாது ஓதிக் கொண்டிருப்பார். எந்தநிலையிலும் அவர் வேலை மறந்ததில்லை. காமக் கணிகையர் கலவியிற் படினும் நாமவேலின் நன்மந்திரத்தை நாவால் நவில்தல் நான் ஒழியேன் என்று அவர் உள்ளம் திறந்து கூறுகிறார்:—

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மற
வேன்முது கூளித்திரள்
டுண்டுண டுடுடுடு டுடே
டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ்
சூர்க்கொன்ற [1]ராவுத்தனே.”

---

[1]குதிரைவீரன்.

பகுத்தறிவு பெருகிவளரும் காலம் இது என்பர். உலகத்தார் உண்டு என்பதை இல்லை என்று உதறுவதே அறிவின் சிறந்த மேம்பாடாகக் கருதும் காலம் இது. ஒன்றிலும் நம்பிக்கை கிடையாது. சிந்தனையைத் தட்டி எழுப்பி உள்ளுணர்வு பொங்க ஓங்கி யெழும் அறிவால் அகக் கண்கொண்டு, நாம் வந்தவாறெங்ஙனே? போமாறேதோ? மாயம் எது? நேயம் எது? உண்மை எது? என்று அளந்தறிவது அரிதான காலம் இது. பொய்யை மெய்யெனக் காட்டும் பொறிவழிபுகுந்து, அதனகத்தடங்கின-குறுகினவற்றையே பெருமையாய்க் கொண்டு பேதுறுகின்றோம். தான்றோன்றியாய் மனம் போலத் திரிந்து, கருவி கரணங்களின் வழி இயங்குவதே நாகரிகச்சின்னம் எனக் கொள்கின்றனர். எதையும் ஆராய்ச்சி செய்தே உண்மை காண்போம் என்று மெய்யை விடுத்துப் பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குகின்றனர். மனிதனின் மன இயல்பு பொதுவாக நல்லனவற்றை எளிதிற் பற்றாது. கெட்டனவற்றைக் கிட்டிப்பிடித்துக் கேடுறுவதே பெரும்பான்மை. மனிதனின் அறிவு - உயிர் அறிவு. அந்தகாரத்தின் அகத்திலே மின்போற் சுருங்கிக்கிடப்பது. அதனோடு, பாசத்தாற்கட்டுண்டு மேன்மேலும் மங்கித் தேய்ந்துகொண்டே போகிறது. அவ்வாறுகட்டுப் பட்ட பசு அறிவு எட்டியும் பார்க்கொணாத பதி அறிவாகிய வாலறிவை எவ்வுதவி கொண்டு ஆராய்ச்சி செய்வது? எவ்வுதவி கொண்டு உண்மை

யைக் காண்பது? அதற்குத் திருவருளின் உதவி யல்லவா தேவை. அத்திருவருளின் உதவி நுழையவும் இடமின்றி ஆணவம் திணிந்து, செறிந்து பொதியப்பட்டுக் கிடக்கிற பசு அறிவாகிய ஆன்மஞானம் பதிஞானத்தை அடைவதற்குத் திருவருளை மனம் உருகிப் போற்றிப் பெறுவதன்றி விதண்டாவாதத்தால் விளைவிக்க முடியாது. பட்டப்பகலும் ஆந்தைக்கு இருளாகத்தெரிவதுபோல், அகந்தை கொண்ட ஆன்மாவும் இறையொளிகாணக் கண்ணற்றுப்போகிறது. முருகன், வேல், மயில் என்று பேசிக்காலத்தை வீணாக்குவானேன்? என்றுஎள்ளி நகையாடுவர். அதிலும் சில தீவிரவாதிகள் “கடவுள் என்று சொல்வதைவிட்டு, மக்களுக்குத் தொண்டு செய்யுங்கள்; பஞ்சைமக்களுக்கு உங்கள் நெஞ்சைக் கொடுங்கள்; பாட்டாளிமக்களுக்குப் பாடுபடுங்கள்!” என்று முதலைக்கண்ணீர் முத்து முத்தாய் உதிர்த்திடுவர். தங்கள் மறைவு வாழ்க்கையில், தன்னலம் கருதும் புன்மையே பெருக்குவர். உண்மையில், கடவுள் பக்தி, தீவினையச்சம், அன்பின்பெருக்கு இவை இல்லாதவன் மக்களின் பொதுநலத்திற்கு எவ்வாறு உழைக்க முடியும்? பொதுநலச் சேவைக்கு மக்களைத்திருத்துவதே சமயம். அதற்குக் கடவுள் பக்தி இன்றியமையாதது. கடவுளிடத்தும் சமயத்திடத்தும் பற்று இல்லாதவன் எவ்வாறு பொதுநல ஊழியனாக முடியும்? பொது நல ஊழியப் போலிகளாகவே திகழ்வர். பொதுநலத்தின் பேரால் தன்னலத்தையே பேணுவார்.

பிறரை ஏமாற்றித் தான்மட்டும் வாழக்கருதும் புன்மையைப் போக்குவது கடவுள் பக்தி ஒன்றே யாகும். அது ஒன்றே இயல்பான அன்பு ஊக்கங் களைத் தூண்டிக் கொடுத்து மக்களை நன்னெறி ஒழுகச்செய்யும்.

நம் நாட்டு இளைஞர்களுக்குப் பகுத்தறிவு மிகுதியால் சமயப்பற்று அறவே அற்றுப்போய் விட்டது. வேல் என்று கூற வாய் கூசுவர். நம் அருமை நேரத்தை அந்தவிதம் வீணாக்கலாமா என்பர். ஆனால் அவர்கள் உண்மையில் நேரத்தை எந்தவிதம் பயன்படுத்துகின்றனர். வீட்டிலும், ரயிலிலும், தெருவிலும், பந்தடி மேடையிலும், பள்ளிக்கூட அறைகளிலும் பலர் கூடியிருந்து பயனிலவே பேசிக் காலத்தைப் பாழ்படுத்துகின்ற னர். நடிக நட்சத்திரங்களின் பாதாதி கேச வருணனை, கேசாதி பாத வருணனை, நடிகையரின் பிறப்பு வளர்ப்பு, அவர்களது அந்தரங்க வாழ்க்கை மர்மங்கள், அவர்கள் சித்திரங்களின் சிங்காரம், இடையின் ஒயில், குரலின் குயில், நடையின் மயில், விழியின் அயில், இவற்றையேபற்றி நாள் முழுதும் கண்டும் பேசியும், உடல் இளைத்து, அறிவு குன்றிச் செயல் கலங்கிப் போகின்றனர். இத் தகைய இழிந்த பேச்சுக்களில் வேல், மயில், கோழி என்று வேண்டுமட்டும் விரித்துப்பேசி நேரத்தைப் பாழடிக்கலாம். பகுத்தறிவு, ஆராய்ச்சி, கூர்த்த அறிவு ஒன்றும் இங்கே கிடையாது. ஆனால்,

முருகன் வேல், அவன் ஊரும் மயில், அவன் கோழிக்கொடி என்றவுடன் பகுத்தறிவு ஆராய்ச்சி பளீர் என்று பாய்கிறது. ஒரு பெண்ணின் விழி வேலைப்பற்றி நாம் மொழிய மொழிய இழிவான நிலைக்கே இறங்கிவிடுகிறோம். நம் மனத்தை வருத்தும் காம வெகுளி மயக்கங்கள் எல்லாம் நம் உள்ளம் நிறையத் துள்ளி எழுந்து விடும். முருகனது வேலை நினைத்தால் தூய எண்ணங்களே உள்ளத்தில் தோன்றிடும். நேர்மை, ஒளி, வீரம், வலிமை, கூரிய அறிவு, வெற்றி முதலிய உயர்ந்தநினைவுகளே நம்மை உந்தி நிற்கும். இறைவன் அருளையும், உயிரின் அன்பையும், வீடு சேறலையும் விளக்கி நிற்பது கந்தன் உகந்த செந்தலை வேல். இதை உணராது களிவெறிகொண்டு பழி தூற்றுவதால் யாருக்குப் பயன் ? ஐயோ ! என்றுதான் பொழுது புலருமோ ? புன்மை இருட்கணம் போயொழியுமோ ? நம்மை நோக்கிச் சொன்னால் கோபிப்போம் என்று மனதை நோக்கிப் பரிகின்றார் அருணகிரியார்:—

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்திருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே.

வேல் என்றவுடனே நம் மனத்துயரம் நீங்கும். அச்சம் அகலும். அக இருளை மாய்க்கும் படை முருகன் கை வேலாயுதம். தனி வழியே செல்வோ

ருக்குப் பயத்தைக் கெடுப்பது வேல். வேலின் பெயரைச் சொல்லிக்கொண்டு நடுநிசியிலும் தனி வழி செல்லலாம் நம் வழிக்குத் துணையாயிருந்து துன்பங் களைவிக்கும்.

விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

ஒல்லும் வகையெல்லாம் வேலென்று சொல்வதே மேலென்று கருதினர் நம் தமிழ் நாட்டினர். குழந்தைகளுக்கு இடும்பெயர் எல்லாம் வேல். அந்த வேலைத்தான் எத்தனை எத்தனை விதமாகச்செல்லப் பெயரிட்டுச் சீராட்டிப் போற்றினர். வேல், வேலாயுதம், சிங்கார வேல், ராமானந்த வேல், பழனி வேல், செந்தில் வேல், தங்க வேல், வீரவேல், கதிர் வேல், குமார வேல், கந்த வேல், இரத்தின வேல், வச்சிரவேல், சத்திவேல், ஞானவேல், முத்துவேல், வெற்றிவேல், வடிவேல், சிவவடிவேல், மணிவேல், சாமிவேல், சொர்ணவேல் என்று பலபடியாக வெல்லாம் பெயரிடுகின்றனர். எத்தனை விதமாக வேலைக் கூறினாலும் அத்தனைக்கும் பயன் உண்டு. சொல்லும்பொழுதெல்லாம் வேல் என்று சொல்லவே இவ்வாறு பெயர்களை இட்டு வழங்குகிறோம். வேலே தமிழர் நாம மந்திரம், சீவ மந்திரம். வட நாட்டிலே வேலின் பெயரே கேட்கப்படவில்லை.

அது தமிழ் நாட்டுக்கே சிறப்பாக உரியது. புன்மையை அழித்து நன்மையைத் தருவது முருகன் கைவேல். அதன் பெயரைக் கேட்டதுமே தீயவை அனைத்தும் ஓடிவிடும். நோய் நொடி கிட்டே நெருங்காது. உயிருக்கு உற்ற துணை வெற்றிவேல். வாழ்க்கையில் அடிபட்டுவீழும் உயிரினைத் தழைக்க வைப்பது அருள் முருகன் அயிற்படை.

மனிதன் எப்பொழுதும் பகையினாற் சூழப்பட்டே இருக்கிறான். தெரிந்த பகைகள் சில; தெரியாத பகைகள் பல. கண்ணுக்குத் தெரியும் பிராணிகளாலும் அவனுக்குத் தீங்கு நேரிடும்; கட்புலனாகாப்பிராணிகளாலும் அவனுக்குத் தீங்கு நேரிடும். 'ஒவ்வொரு கணமும் எண்ணற்ற கிருமிகள் நம் உடலை உள்ளும் புறமுமாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அவை யாவும் நமக்குப் பகையே. சிறிது நிலை தவறினால் எண்ணற்ற தீய எண்ணங்கள் வந்து நம்மை நலியக் காத்து நிற்கும். அவையாவும் பகையே. அப்பகைகளை யெல்லாம் வெல்லும் ஆற்றல் மனிதனுக்கு வேண்டும். தூய உடலும், தூய மனமும், தூய அறிவும் பெற்றவனே ஆற்றல் படைத்தவனாவான். உடலைப் பிணியாகிய பகையும், மனத்தைத் தீய நினைவுகளாகிய பகையும், அறிவை மயக்கமாகிய பகையும் வந்து கெடுத்துவிடும். அப்பகைகள் யாவும் வேல் என்றவுடனே வெருவி ஓடும். முருகனையும் அவன் வெற்றிவேலின் வீரத்தையும் புகழ்ந்து வந்தித்தால்,

துள்ளிக் குதித்துத் துரிதமாய்த் தோன்றிடும் அவன் திருக்கர வேல். இருக்கிற இடம் தெரியாது நம்மை வருத்தும் பகைகள் பரிந்தொழியும். நினையு மாத்திரையே நிமலன் வேல் நில்லாது நிச்சயமாக நிமிர்ந்தோடி வரும். வெற்றி வேலின் புகழே பொருள் சேர் புகழ். அதன் புகழை விரும்பிக் கூறினால் இருள் சேர் இருவினையும் இரிந்தோடும். இதைக் கவி பாரதியார் அழகுறத் தெளிவிக்கிறார்:-

"வெற்றி வடிவேலன் — அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ — பகையே
துள்ளி வருகுது வேல்"

உலகினை வருத்தும் துன்பமும், கொடுமையும் இருளும் ஒழியவே வந்துதோன்றினான் முருகன். நம்மைவருத்தும் துன்பம் கடல்போன்றது. நம்மை ஒறுக்கும் கொடுமை மலைபோன்றது. நம்மைப் பிணிக்கும் இருள் சூர்போன்றது. அந்த முப் பகைகளையும் பொடித்து நசுக்கும் வடிவேலுடன் வண்ணப்பாலகன் வந்து தோன்றினான். சரவணப் பூம்பள்ளியிலே அறுவர் கார்த்திகைப் பெண்கள் அளித்த திருவமுது கடைவாய்வழி ஒழுகக் குவா குவா என்று குழந்தை சிணுங்கி அழுதது. சின்னஞ்சிறு பசலைதான். ஆனால் அப்பசலையின் செல்லக்குரலோடு நமதுபகைகளாகிய துன்பமும் கொடுமையும், இருளும் சேர்ந்து அவலக் குரல் எழுப்பி ஏங்கி அழுதன. ஐயோ! நம்மைத்

தொலைக்கும் தொல் முதல்வன் தோன்றி விட்டானே என்று கத்திக் கதறின. குழந்தை பிறந்த அரவம் கேட்டுக் கடலும், மலையும், சூரும் கலங்கழுது கலங்கின. குன்று தோறாடி மகிழ்வதால் அக்குழந்தைக் கடவுளைக் குறிஞ்சிக் கிழவன் (மலைநிலத்திற்கு உரியவன்) என்று அடியார்கள் போற்றுவர். அவனைப் பண்டார வேலனைப் பழனி ஆண்டவனைப் பார்த்தும் மகிழ்ந்திடுவர். ஆனாலும் குழந்தை குழந்தை தானே. அவனைக் கிழவன் என்றுகூறும் அதிசயம் என்னே! என்று பகடி பேசி வியக்கின்றார் அருணகிரியார்:—

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதும் குவலயமே.

குருந்து என்பது இளம்பசலை. கடலையும், குன்றையும், சூரனையும் அழ அழவைப்பதற்காக வந்துதித்தபிள்ளை அழுதது என்றபொருள் நயம் போற்றியறிக.

உதயசூரியன் உதித்து வருதல்போற் குழந்தை குமரன் குதித்து வந்தான். சிவபெருமானுக்கு மட்டுக்கடங்கா மகிழ்ச்சி பிறந்தது. அறுமாமுகவன் அமரர் படை வீரனாய் அவுணர் படையை அழிப்பதற்கு ஆயுதங்கள் பலவும் அளித்துதவினார். முக்கட் பெருமான் முத்திப்பெயரும் முதன்மை

உருவமும் பெற்றுத்திகழும் உருத்திரர் பதினொரு வரையும் உரன்மிகு படைகளாக்கிப் பன்னிரு கண்ணன் பதினொரு கரத்திலும் பாங்குற அமைத்தார். படைக்கு நாயகமாய் நமக்குத் தாரகமாய்த் தாழ்வுகெடுக்கும் வாழ்வுபெறு தனிச்சுடர்வேல் ஒன்றைப் பன்னிரண்டாவது கரத்திற் கருணையோடளித்தார்.

பொன்திகழ் சடிலத் தண்ணல்தன் பெயரும்
பொருவிலா வுருவமுந் தொன்ஞள்
நன்று பெற்றுடைய வுருத்திர கணத்தோர்
நவிலருந் தோமரம் கொடிவாள்
வன்திறற் குலிசம் பகழி அங்குசமும்
மணிமலர்ப் பங்கயம் தணடம்
வென்றிவில் மழுவு மாகிவீற் றிருந்தார்
விறன்மிகும் அறுமுகன் கரத்தில்.

ஆயதற் பின்ன ரேவின்மூ தண்டத்
தைப்பெரும் பூதமும் அடுவ(து)
ஏயபல்லுயிரும் ஒரு தலைமுடிப்ப(து)
ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களும் சிந்தி
மன்னுயி ருண்ப(து) எப்படைக்கும்
நாயகமாவ(து) ஒருதனிச் சுடர் வேல்
நல்கியே மதலைகைக் கொடுத்தான்.

நல்கியேகொடுத்தான் என்பது நன்குசிந்திக்கற்பாலது. ஏனைப் பதினொரு படைகளுக்கும் உருத்திரர்களை மூலமாகச் சொல்லப்பட்டது. வேலுக்கு

மூலம் யாது ? அதுவெளிப்படையாய்க் கூறப்பட வில்லை. ஆனல், கூறாமலும் விடவில்லை. குறிப்பாக உய்த்துணர வேண்டும். நல்கினன் அல்லது கொடுத்தான் என்றுகூறினலே போதும். நல்கியே மதலைக் கொடுத்தான் என்றதனல், சிவபெருமான் முருகனுக்குத் தன்னையே ஒருதனிச் சுடர்வேலாக நல்கிக் கொடுத்தான் என்றே கொள்ளவேண்டும். இதனை அறிஞர்கள் சிந்தித்துப் புந்தியிற்கொள்வார்களாக.

படைகளுக் கெல்லாம் தலைமை சான்றது பண்ணவன் திருக்கைவேல். ஞானக் கொழுங் கனலே ஞானக்குழந்தை முருகனிடத்தில் மாணப் படை வேலாய் வந்துதித்தது. சத்தி அளிக்கும் ஞானமே முத்திக்குமரன் முதற் படையாயது. வேலின் அமைப்பு முறையே ஒரு சித்திரம். அதன் மூலமே சிவபெருமான். சிவ ஞானமே சிவவடிவேல். வேலின் நீட்சி சிவ ஞானத்தின் காலம் கடக்கும் அதிவேகத்தைக் குறிக்கிறது. வேலின் உருட்சி சிவஞானத்தின் அழியாத் தன்மையை அறிவுறுத்துகிறது. வேலின் இலைமுகம் சிவஞானத்தின் நீக்கமற நிறையும் அகலத்தைக் குறிக்கிறது. வேலின் கூர்முனை சிவ ஞானத்தின் நுண்மையைக் குறிக்கிறது. வேலின் வாள்போன்ற வாய் மும்மலங்களையும் முற்றக் களைகின்ற சிவஞானத்தின் பெற்றியினைப் புலனுறுத்தும். வேலின் ஒளி சிவஞான விளக்கத்

தை விளக்குகின்றது. வேலின் வடிவை உற்று நோக்கினல் தண்டு, கழுத்து, இலைமுகம் என மூன்று பகுதியாய்த் தோன்றக் காணலாம். தண்டு சத்தாகிய உண்மையையும் கழுத்து சித்தாகிய அறிவினையும், இலை ஆனந்தமாகிய இன்பத்தையும் காட்டி, சச்சிதானந்த வடிவாய்த் துடி கொள்கிறது சண்முகன் சத்திவேல். வேலின் தத்துவத்தை இன்னும் விரிக்கிற்பெருகும் என்று இத்துடன் அடக்கிக்கொள்ளப்பட்டது.

பகையை மாய்த்துப் பாடுபெறும் குகன் கைவேலின் வீரச்செயலோ விந்தையை விளைக்கும். தாரகன் என்னும் பேரோனையும் கிரவுஞ்சம் என்னும் கிரியினையும் இறைப்பொழுதில் உடல் கீறி, உள்ளுயிர் குடித்து, இறந்த தேவரை மீட்டுக் கொடுவந்தது. கடைநாளிற் காலகண்டன் காயெரி சினத்தொடு உலகம் யாவையும் பொடிபடுத்தும் போது அவன் நுதல்விழி நாட்டம் கொதித் தழல் வதுபோற் சீறி யெழுந்து சினந்து பொருத தாம் அவன்-சிறுவன் - கைவேல்:—

சேயவன் விட்டிடு தனிவைவேல்
செருமுயல் தாரகன் வரையோடும்
ஆயிடை செய்த புணர்ப்பெல்லாம்
அகிலமும் அழிதரு பொழுதின்கண்
மாயையி னுகிய உலகெங்கு
மலிதரு முயிர்களு மதிசூடும்
தூயவன் விழியழற் சுடுமாபோற்
றுண்ணென அட்டது சுரர்போற்ற.

முருகன் முனைபடைமுன் அணுக்குண்டுகோடியும் துணுக்குண்டு மருங்கோடி மாய்ந்தொழியும். துட்டன் உடலையும் துளங்கு கிரியையும் தூள்படத் துளைத்துத் துண்டித்துத் தண்டம் செய்த அத்திரு வடிவேலது பேரிடி யொலியின் பெருமைதான் என்னே! பசலை முருகன் வேல் அசனி போற் புறப்பட்டது. அலைகள் அலமந்தன. கடல் வயிறு குழம்பியது. மலைகள் நிலை குலைந்தன. பூமி பிளந்ததோ அண்டம் வெடித்ததோ என்றிருந்தது. துள்ளித் துடித்து மின்னெனப் பாய்ந்தது வேற் படை. தாரகன் சடசடவென்று சாய்ந்தான். கிரவுஞ்சம் கிலு கிலுத்து நொறுங்கியது.

தண்டம தியற்றும் கூர்வேல் தாரக அவுணன் மார்பும்
பண்டுள வரையும் பட்டுப் பறிந்தபே ரோசை கேளா
விண்டது ஞால மென்பார் வெடித்தது மேரு வென்பார்
அண்டம துடைந்த தென்பா ராயின ரகிலத் துள்ளோர்.

கிரவுஞ்சன் என்பவன் ஓர் அசுரன். தாரக னுடைய மாயாபுரியில் இருந்தான். அகத்தியர் தென்திசை நோக்கிச் செல்லும்பொழுது கிரவுஞ்சன் தனது மாயாசக்தியினால் ஒருமலை வடிவெடுத்து வழி மறித்தான். பல முடக்குவழிகளைத் தோன்றச் செய்து அகத்தியரை அங்குமிங்குமாய் அலைய வைத்துப் பின் வழிகாணாது மயங்க வைத்தான். அதனை அறிந்துகொண்ட அகத்தியர் தனது கைத் தண்டினால் மலையைத் தொட்டு, " நீ இம்மலை வடிவாகவே யிருந்து பின் முருகன் கைவேலால்

இறப்பாய்" என்று சாபம் கொடுத்தார். தாரகாசுரனுடன் முருகன் பொருதபொழுது தாரக அவுணன் வேறு தஞ்சம் காணது கிரவுஞ்ச மலைக் குப்பின்னல் மறைந்துகொண்டு, மலையை முன் நகரவிட்டுத் தான் பின்னின்று பொருதான். அதனைக் கண்ட முருகப்பெருமான் கிரவுஞ்சனையும் தாரகனையும் உடன் மாய்த்து இலக்கத்தொன்பது வீரர்களான தேவர்களையும் மீட்டுக்கொண்டுவரும்படி வேற்படையை ஏவினன். கிரியும் கிராதனும் கிடுக்கலங்கிக் கீழே விழவும், தேவர்கள் எடுத்த ஆரவாரம் இந்திரநகரின் அந்தப்புரத்திலே அவலித்திருந்த தேவமகளிர் காதிலே கல்லென்று பட்டதாம். இவ்விதம் அஞ்சிக்கிடந்த அயன் திருமால் இந்திரன் பொன்னட்டுபுலவர் மணம் வேட்ட நங்கைமார்களின் மங்கலப் பொன்னணைக் காத்தளித்த நாயகத்தின் திருப்புகழை எட்டுத் திக்கிலும் எட்டி ஒலிக்கக் கவி ஒட்டக்கூத்தர் கொட்டி முழக்குகிறார்:—

ஒருதோகை மிசையேறி யுமல்சூரு மலைமார்பு
முட னூடறப்
பொருதோகை சுரராச புரமேற விடுகாலை
புகழ் பாடுவாம்.

இப்பாடலில் மலை மார்பும் சூரும் என்று கூருது, சூரும் மலைமார்பும் என்று கூறினர். முருகனது ஒப்பற்ற வேல் முதலில் மலை உருவிப் பின் சூருடல் உருவியது என்றில்லாமல், மலையும் சூரும் உடன்

உருவிச்சென்றது என்று, வேலின் கடுமையை, அதாவது வேலின் கடுவேகத்தை, வெகு அழகுறப் பாடியுள்ளார். மலையைத் தைத்த அப்பொழுதே சூரன் உடலையும் தைத்ததாம். மேலும், விடுகாளை என நிகழ்காலத்தாற் கூறியது, வேலானது எப்பொழுதும் மல இருளை நீக்கும் இயல்பு பற்றி என்க.

சூரபன்மனுடன் முருகன் நிகழ்த்திய போரில் மூன்றாம் நாளிடைப் பானு கோபன் மாயப்படையின் உதவியால் வீரவாகு முதலிய தேவர்களை மறிந்து விழும்படிச் செய்துவிட்டான். தன் துணை வருக்குற்ற துயரை நாரதர் கூறக்கேட்டுச் சினம் கொண்ட முருகன் அவர்களை மீட்டு வரும்படி வேற்படையை ஏவினன். உடனே ஆயிர கோடி சூரியர் அணைத்தெழுந்தாற்போற் பணைத்துப் பாய்ந்தது பகவனின் படையரசு. மாயிருள் ஞாலத்துப் பாயிருள் பருகும் ஞாயிறு போன்ற அவ்வெய்ய படைமுன்னர் தேவர் முகங்கள் கமலம் போல் மலர்ந்தன. அவுணர் முகங்கள் கருவிளம் போன்று குவிந்தன. அயிற் படையின் வெயிலொளிபட்டு மாயை மாண்டாள். தேவர்கள் மீண்டார். மின்னொளி விரித்து விண்ணிடைச் செவ்வேல் செவ்வேள் எனவே சிறந்து நிமிர்ந்தது. பேரொளிப் பிழம்பாய்ப் பிறங்கிய தன்மையாலும், பகையிருளை அறுக்கும் முகம் உடைமையால் அறுமுகத்தாலும், சிவனிடத்தேயிருந்து தோன்றியதாலும், சக்தி

(ஞானம்) யாகப் பரவப்படுதலாலும், வேல் என்பது வெறும் படையன்று. முருகனுக்கு உள்ள தன்மையெல்லாம் அவன் வேலுக்கும் உண்டு. கந்தனுக்குகந்த அந்த வேல் கந்தனே என்று வந்தித்தல் அறிவாகும். முருகன் இன்றி வேல் இல்லை; வேல் இன்றி முருகன் இல்லை. வேலாயுதம் கையிற் கொடுத்தன்றி முருகன் உருவத்தை வழி படுதல் தவறு என்று ஆன்றோர் மொழிவர். வேளும் வேலும் வேறில்லை. இவ்வுலகம் யாவினும் நீக்கமற நிறைந்தொளிர்கின்றது வேல். அயிலே முருகனது ஆற்றல்; அவனது சக்தி. நன்றினை ஆக்கும். தீமையைப் போக்கும். அடைந்த அடியாரை ஆதரித்தெடுக்கும். மல இருள் கெடுக்கும். ஞானவொளி கொடுக்கும். தவறுகளைத் தடுக்கும். தீயருடன் போர் தொடுக்கும். ஆணவத்தை ஒடுக்கும். பாசத்தைப்படுக்கும். மெய்யன்பரை வீட்டிடை விடுக்கும். முருகா என்றிட முன்னம் வருவது வேல். அருள் சுரப்பது வேல். இருள் ஒழிப்பது வேல். வெல்லுவதும் வேல்; கொல்லுவதும் வேல். இன்பம் தருவது வேல். துன்பம் துடைப்பதும் வேல். வேல் அன்றி வேறு தஞ்சம் நமக்கு இங்கில்லை. தங்களை மீட்க வந்த தெய்வத்திருவேலை அறிஞர்க்கு அறிஞனை அந்தமில் புகழான் வீரவாகுவும் கந்தனே எனக் கைதொழுது ஏத்தினன்:—

அந்தமி லொளியின் சீரால்
அறுமுகம் படைத்த பண்பால்

எந்தைக ணின்றும் வந்த
இயற்கையாற் சத்தியாம் பேர்
தந்திடும் பனுவல் பெற்ற
தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக்
கண்டுளக் கவலை நீத்தேம்.

ஆகா! கிரவுஞ்சன் கிடுகிடாய்த்துக் கீழே விழுந்தான். தாரகன் தரையோடு தரையாய்த் தகர்க்கப்பட்டான். செரு முருகன் செவ்வேலின் செய்தி இது. ஆண்டவன் தீண்டும் நீண்ட வேலினல் மாண்ட தேவரும் மீண்டுயிர் பெற்றனர். சீற்ற வேலின் ஆற்றல் இதுவென்ருல் அதை போற்றித் தொழுவதே ஏற்றமதாகும் என்பதைக் கண்டான் இரணியன், சூரபன்மனின் மகன். வீரன் கையில் வேலைக்கண்டும், அவன் வீ கமழ் கழலடி விழுவதை விட்டுப் போருக்குப் புறப்பட்ட தந்தையின் அறிவின்மையை எண்ணி வருந்தினன். அத்துட்டன் முன்னரும் விட்டுப் பேசுகிருன் இரணியன்:—

தாரகற் செற்ற தென்ருற்
றடவரை பொடித்த தென்ருல்
வார்புனற் கடலு ளுய்த்த
வலியரை மீட்ட தென்ருற்
கூருடைத் தனிவேல் போற்றிக்
குமரன்தாள் பணிவ தல்லாற்
போரினைப் புரிது மென்கை
புலமையோர் கடன தாமோ.

என்ன சொல்லியும் சூரனுக்கு ஏறவில்லை. இறுதியில் முருகனைப் போரில் எதிர்த்தான். இந்திரனை மயிலாக ஊர்ந்து போர்க்களத்திற் பொறுக்கெனத் தோன்றினன் வேல் முருகன். ஆலமர் செல்வனின் அருங்குமரன் நீல்கொண்ட தோகைமேல் வேல் கொண்டு எழுந்தருள, பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தையென்றே மால்கொண்ட சூரன் மனத்திடை மதித்தான். முருகன் சூரனுக்குச் சிறிது போதம் தெளிவித்துத் தன் பேருருவைக் காட்டினன். சூரன் விதிர் விதிர்த்து நடுங்கினன். வெருவி உள் ஒடுங்கினன். தான் முன் தருக்குடன் தவறு செய்த பழியினுக்கு நாணினன். யாவருக்கும் மேலான பரம்பொருளே முருகன் என்பதைப் புந்தியில் ஓர்ந்து உண்மை தெளிந்தான்.

கோலமா மஞ்ஞை தன்னிற்
குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட்
பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கு மேனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ.

என்று சிந்தித்தான். திருக்கை வேலன் திருமுன்னர் சூரனுக்கு அன்பு பெருகியது; உள்ளெலும்பு உருகியது. அண்ணலைத் தாழ்ந்து பணிந்து பரவுதற்கு அவன் உள்ளம் ஒருப்பட்டது

ஆனல் பாழாய்ப்போகிற மானம் என்பதொன்று இடை மறித்து நின்றது. அன்று சூரனுக்கு ஏற்பட்ட மானம் இன்று நம்மிற் பலரிடையும் பரவி இருப்பதைக் காணலாம். இன்று கோயில், கடவுள் என்ருல் வணங்காமுடியுடன் பிணங்கிச் செல்வதே கல்வியாற் பெறும் பயன் என்றும், பேரறிவுச் சின்னம் என்றும், பெருமை என்றும் பலர் எண்ணுகின்ருர்கள். கடவுளை வணங்குதல் நல்லது என்று உண்மையில் சிலருக்குத் தெரியினும், பிறர் கண்டு நம்மை நகைப்பார்களோ, பழைய கர்ஞடகம் என்று பார்த்தவர் பழிப்பரோ, படித்தும் அறிவில்லை என்று கூட்டாளிகள் இகழ்வரோ, போலிப் பகுத்தறிவாளர் கேலி செய்வரோ என்று வணங்காதிருப்பதும் உண்டு. இதற்காகச் சிலர் பிறர் காண வணங்காது மறைமுகமாய்க் கடவுளைத் தொழுவதும் உண்டு. தங்களைப் பேரறிவாளர் என்று பிறர் மெச்ச வேண்டும் என்று, வெளியிலே கோயில் இல்லை, கடவுள் இல்லை என்று நாத்தழும் பேற நாத்திகம் பேசும் மாக்கள் மலிந்து வருவதைக் காண மனம் நலிவுறுகின்றது. இத்தகையோரை உண்மையில் மானம் தடுக்கின்றது என்றுகூட சொல்வதற்கில்லை. இவர்கள் பிறரை ஏமாற்றித் தம்மையும் ஏமாற்றும் பேதையரே யாவர். ஆனல் சூரனை மானம் தடுத்தது.

சூழுதல் வேண்டுந் தாள்கள்
தொழுதிடல் வேண்டும் அங்கை

தாழுதல் வேண்டுஞ் சென்னி
துதித்திடல் வேண்டுந் தாலு
ஆழுதல் வேண்டுந் தீமை
யகன்றுநா ளிவற்கா ளாகி
வாழுதல் வேண்டு நெஞ்சம்
தடுத்தது மானம் ஒன்றே.

ஆ! என்னே கொடுமை இருந்தவாறு! சூரன் கரங்கள் முருகன் அடிகளைத் தொழுவதற்குக் காத்துநின்றன. அவன் தலை தாழ்ந்து வணங்கத் தவித்தது. துதிசெய நாக்குத் துடித்து நின்றது. தீமைகள் நீங்கி அடியவனுகிப் பேரின்பப் பெரு வாழ்வு வாழ்வதற்கு நெஞ்சம் வேட்டு நின்றது. இத்தனையையும் ஆகவொட்டாமல் அடித்தொதுக்கியது மானம் ஒன்றேதான். மானத்துடன் வாழ வேண்டியது சிறப்புடையதே ஆனல் இறைவனுக்கும் உயிருக்கும் இடையில் இந்த மானம் வரலாகாது. அதை மானம் என்று தவருக நினைக்கிறது உயிர். அது உண்மையில் ஆணவம் தான். ஆணவ முனைப்பு உயிருக்கு இருக்கிற வரையில் அது ஆண்டவனை அணுகமுடியாது. யான் என்றும் எனது என்றும் எழுகின்ற எண்ணங்கள் அறவே ஒழிய வேண்டும்.

இவ்வாறு மானம் தடுத்த தானவன் ஆணவம் கொண்டு மானவன் முன்பு மாய இருட்படலமாய் மண்டி எழுந்தான். அதைக் கண்டு ஞாயிற்றுக் கடவுளும் நடுங்கிப் போயிற்று. இருளினிடையே

இடுக்கண் விளைக்கும் கொடியனுக்கு அஞ்சின தேவர்கள் ஓலமிட்டு முருகனை அழைத்தனர். தனது திருவிளையாடலை நிறுத்திச் சூரனது ஆகத்தைத் துண்டிக்கத் திருவுளம் கொண்டான் முருகன். சிரித்தமுகத்துடன் தனது விரித்தகதிர் வேலினைத் திரித்துப் பாய்ச்சினான். வெஞ்சுடர் மீளிவேல் இருளைப் பருகியது. சூரனின் மாயாவேடமும் விட்டது:—

ஏயென முருகன் தொட்ட விருதலை படைத்த ஞாங்கர்
ஆயிர கோடி யென்னா மருக்கரிற் றிகழ்ந்து தோன்றித்
தீயழற் சிகழி கான்று சென்றிட அவுணன் கொண்ட
மாயிரு ளுருவ முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே.

செய்யவன் வெய்யவேல் வெய்யோனை வெகுண்டு நோக்கியது. செய்வதறியாது திகைத்த சூரன் கடலின் நடுவே ஒருகொக்காய் (மாமரமாய்) முளைத்தான். மாமர வடிவம் வானளாவ ஓங்கி நின்றது. அதைக்கண்டு சீறியெழுந்து சினக்கதிர் சிந்தியது செவ்வேல். அதனது அரிசினத் தீயின் முன்னர் அரியயனும் தங்கள் பெருமிதம் விட்டு அஞ்சி ஒடுங்கினர். விண்ணிடைத்துள்ளி எழுந்தது வீரன்வேல்:—

மாறம ருழந்து பன்னாள் வரம்பறு பிரம மாவார்
வேறிலை யாமே யென்ற இருவரும் வெருவி நீங்க
ஈறொடு முதலு மின்றி யெழுகிரி விலக்கி விண்மேற்
சேறலி னிலைமை காட்டிப் படர்ந்தது கடவுட் செவ்வேல்

தெவ்வரை அடுதற்கு அவ்விதம் விரைகின்ற வெவ்விலை எஃகத்தின் நிலையை என்சொல்வது. சிவன்கழுத்தில் உறையும் ஆலகால விடத்தைத் தான் அள்ளிக் கொண்டு வந்ததோ! அவனது நெற்றிக்கண்ணின் நெருப்பையே கவர்ந்ததோ! அவன் இடக்கரத்து வன்னி (தீ) யைத்தான் வாரியதோ ! அவையனைத்தையும் திரட்டித்தான் திரிந்ததோ! அச்செந்தழல் வண்ணனைப் போலவே சீறியது. மாமரத்தைத் தவிடுபொடியாய்ச் சிந்தித் தொலைத்தது:-

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
இடம் பிடித் திட்ட தீயின் றேய்த்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

கொல்லன் உலையிலே இரும்பைக் கொண்டு தீயில்தோய்த்து வேல் இயற்றுவான். தகதகவெனச் சொலிக்கும் குகனது வேலோ, சிவனது நெற்றிக் கண்ணாகிய உலையிலே அவன் மிடற்று நஞ்சினைக் கொண்டு, அவன் இடக்கரத்துத் தீயிலே தோய்த்து வடிக்கப்பட்டதாம்.

இம்மாமரத்தைப் பற்றிப் பல விதமான வரலாறுகள் உண்டு. சூரபன்மனே மாவுருவெடுத்துக் கடலுள் நின்றான் என்பது ஒன்று. திருமுருகாற்றுப்படையில்,

அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்.

என்னும் அடிகளுக்கு நச்சினார்க்கினியர் பின்வரும் விசேட உரை எழுதுகிறார்:—"அவுணரெல்லாருந் தம்முடனே எதிர்ந்தார் வலியிலே பாதி தங்கள்வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாவை வெட்டினன் என்றவாறு". இதனால் இம்மந்திர சக்தி வாய்ந்த மாமரம் சூரனில்லை என்பதும், சூரனுக்கு உதவியாய் வஞ்சித்து நின்றதோர் மரம் என்பதும், அதை அழித்தே சூரனைக் கொல்லவேண்டும் என்பது தெரிந்து முருகன் அந்த மாவைக் கொன்றான் என்பதும் தெரியவரும். வேறுரை ஒன்றில், மாயையினாலே கீழ்நோக்கிப் பூத்த மாவாய் நிற்கும் சூரபன்மனை முதலோடே தடிந்தான் என்று கூறப்படுகிறது. இதற்கு உரையாசிரியர் என்பவர் ஒருவரும் மற்று ஓர் உரை எழுதியிருக்கிறார். அவர் இம்மாமரம் அவுணர்கட்கு நற்குறியாக மேல்நோக்கி மலர்ந்தும், தீக்குறியாகக் கீழ்நோக்கிக் கவிழ்ந்து மலர்ந்தும், நிமித்தம் கூறி உதவிக்கொண்டிருந்தது என்று எழுதி யுள்ளார். எவ்வாறாயினும், மாமரம் அழிந்ததும், வேலாயுதம் சூரன் உடலை இருகூறாகக் கிழித்தெறிந்து வான்வழியே விரைந்தது:—

செங்கதி ரயில்வாள் கொண்டு
செருமுயன் றாருயி ரார்த்துத்

துங்கமோ டெதிர்ந்து சீறுஞ்
சூருரங் கிழித்துப் பின்னும்
அங்கம திருகூ றாக்கி
யலைகடல் வரைப்பில் வீட்டி
யெங்கணு மறைக ளார்ப்ப
வெஃகம்வான் போயிற் றம்மா.

தேவர்கள் தண்மலர் தூவி அதன் சீற்றத்தை மாற்றினர். அயிலும் அங்கி (தீ) வடிவம் நீங்கி அருள் உருவம் கொண்டது. கங்கையிற்குளித்துக் கதம் நீங்கியது. மீளிமொய்ம்பன் முருகன் கையில் மீளவும் வந்து அமர்ந்தது:—

புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழை யிடையினேகி
அங்கியின் வடிவ நீங்கி அருள் உருக் கொண்டு வான்றோய்
கங்கையிற் படிந்து மீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள்தம் பெருமான் செங்கை யெய்தி வீற்றிருந்ததவ்வேல்.


சாகாவரம் பெற்றிருந்த சூரனின் உடல் இரு துண்டானதும், அவன் சேவலும் மயிலுமாகிச் செய்யவன் முன்னர்ச் சேவித்து நின்றான். அடைந்தோரை அஞ்சல்என்று அபயம் கொடுப்பவன் முருகன். தீயவரேனும் தூயவராகித் தன்னைத் துதிப்பவர்க்கு அருள்பாலிப்பது பாலமுருகனின் பண்பு மேம்பாடு. சேவலைக் கொடியாய் எடுத்து, மயிலினை ஊர்தியாய்க் கொண்டு சூரனுக்கு அருள்புரிந்தான் சுந்தரச் சுடர் வேல் மூர்த்தி:—

தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமு னுற்றாற்
றூயவராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை

ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசம ரிங்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்.

இதனால், சிவநெறிச் செம்மையோராய தமிழ் மக்களுக்கு வேலும், மயிலும், சேவலும் சிறந்த கருத்துக்களைக் குறிக்கும் சின்னங்களாகக் கொள்ளப்படும். வேல் ஞானசத்தியைக் குறிக்கிறது. மயில் ஓங்காரவரிவ்டிவத்தைக்குறிக்கிறது. சேவல் நாதத்தைக் காட்டாநிற்கும். ஆறுமுகன் சூரனை ஏறுமயிலாகக் கொண்டு அவனது மாயாமலத்தை மாய்த்தான். சேவலைவென்றடுவிறற்கொடியாக உயர்த்துச் சூரனது கன்மவினைமலத்தைக்களைந்தான். ஞானசத்தியாகிய தனது வேலால் சூரனது உயிரைத் தீண்டி, அதை விடாது பற்றி நின்ற ஆணவ மலத்தைக் கெடுத்தான். இவ்வாறு சூரன் மும்மலங்களும் ஒழியப் பெற்றுத் தூயவனாகி இறைவனின் இணையடி சேர்ந்து இன்பம் எய்தினான். ஆதலால் நாமும் முருகனது வேலையும், மயிலையும், சேவலையும் இடைவிடாது ஓதிக் காதலாகிக் கசிந்து கரைந்துருகினால் கதிர்வேலன் திருவருள் கைகூடுமென்பது திண்ணம்.
நமது இடர்களையத் **துள்ளி வருகுது வேல்.**





" மற்றோர் சித்தாமிர்தத்தடந் தீர்த்தத் துறைக்குறுந் திவலையொன்றே பயையுமால் " —குமரகுருபரர்.

உ

வேலுமயிலுந் துணை.

பாலயிலுங் குழவியெனப் பாரிலுதி யாமல்
பாரையினுங் கடியமனப் பாவையர்மா லுறுமல்
சேலயிலுங் கொக்கெனவெம் தீமைபுரி யாமல்
சேனையிலும் யானையிலுஞ் சிந்தனைவை யாமல்
சூலையிலும் நமன்தூதர் வாதையிலும் படாமல்
சூறையிலுங் கொடியமனஞ் சுழன்றுதிரி யாமல்
காலயிலும் பாம்பயிலுங் கார்மயிலை உகைத்தோன்
கை அயிலை மாலையினுங் காலையினும் பணிவாம்.

—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம். T.E. 68. C. 1000. 18-11-47